# கர்மா



ப்ரக்ஞன்

# கர்மா

தெளிவுரை

**ப்ரக்ஞுன்**

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கர்மா |
| தெளிவுரை | : | ப்ரக்ஞன் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2020 |
| வெளியீடு | : | பராபரம் |
| பக்கங்கள் | : | 52 |
| விலை | : | அக விழிப்பு |

| | | |
|---|---|---|
| பதிப்பாளர் | : | ஓம் கிராபிக்ஸ்<br>கோயமுத்தூர். |

# கர்மா

கர்மா என்றால் செயல் அல்லது வினை எனக்கூறலாம். அவ்வாறு ஒருவரால் உடல், மனம் மற்றும் வாக்கால் செய்யப்படுகின்ற செயல்களே (வினைகள்) நல்வினைகள் மற்றும் தீவினைகள் என்ற இரண்டு வகைகளில் அமைகிறது.

அவ்வாறு, ஒருவரால் செய்யப்படுகின்ற ஒவ்வொரு செயலுக்கும் அதற்கான எதிர்வினையும் கட்டாயம் உண்டு. அதாவது, "ஒருவர் எப்படி செயல் படுகிறாறோ அதற்கேற்ற அனுபவம் அவருக்கு வாய்க்கின்றது." நியூட்டனின் விதிப்படி "ஒவ்வொரு செயலுக்கும் சமமான எதிர்வினை ஒன்று உண்டு" என அறிவியல் கூறும் அடிப்படை விதியும் இதுதான்.

ஒருவர் உடல், மனம் மற்றும் வாக்கால் செய்யும் செயல் விளைவுகள்தான் அவரை வழி நடத்துகின்றது. அப்படி அவர் செய்யும் செயல்களை மூன்று விதமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

அவைகளை, நித்யம், நைமித்யம், காம்யம் என்று அழைக்கப்படுகின்றது. ஒருவர் எத்தகைய செயல்களை செய்தாலும், அவைகள் இந்த மூன்றுக்குள் மட்டும்தான் அடங்கும்.

இதிலே, நித்யம் என்பது, ஒருவர் தன் வாழ் நாளில் அனுதினமும் செய்யக் கூடிய அத்தியா வசியமான அல்லது மிகவும் அவசியமான செயல்கள் என்று கூறலாம்.

அதாவது, காலை எழுந்தவுடன் பல்துலக்குவது, குளிப்பது, உடைகள் மாற்றுவது, உணவு உண்பது போன்றவைகள் எல்லாம் நித்தமும் (நித்யம்) செய்ய வேண்டிய நிலை உள்ளதினால், அவைகளை "நித்ய கர்மா" என்று அழைக்கப்படுகின்றது.

அதில் சிலர் செய்யும் சந்த்யா வந்தனம், அக்னி ஹோத்ரம், இறைவழிபாடு போன்றவைகளும் இதில் அடங்கும்.

அடுத்து, நைமித்யம் என்பது, அந்த காரியத்தின் நிமித்தம் அதற்கான காரணம் ஒன்று இருக்க வேண்டும் என்பதினால், அதை "நைமித்ய கர்மா" என்று கூறப்படுகின்றது.

ஆனால், அதற்கான பட்சம், திதி, மாதம் அல்லது வருஷங்களில் வரும்போது மட்டும்தான், அதன் நிமித்தம் அதைச் செய்ய வேண்டுமே தவிர, அவைகளை அனுதினமும் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

உதாரணமாக, ஒருவர் பிறந்தநாள், குழந்தைக்கு பெயர் வைத்தல், காது குத்துதல், பெண்கள் பூப்பெய் துதல், திருமணம் மற்றும் இறப்பு போன்ற ஏராளமான சடங்கு, சம்பிரதாயங்களில் நம்மால் செய்யப்படுகின்ற செயல்களை **நைமித்ய கர்மா** என்று கூறப்படுகின்றது.

மூன்றாவது **காம்யம்** என்பது, ஒரு பலனை எதிர்ப் பார்த்து, அதன் விருப்பத்தின் அடிப்படையிலே அல்லது உலகாயதனமான ஆசைகளின் காரணமாக செய்யப்படுகின்ற செயல்கள் என்பதினால், அதை **"காம்ய கர்மா"** என்று கூறப்படுகின்றது.

பொதுவாக, மனிதர்களின் ஆசைகளினால் விளையும் செயல்களுக்கு அளவே இல்லை. அவைக ளைப்பற்றிப் பட்டியல் இடுவதற்கு இங்கு இடமும் இல்லை. ஏனெனில், ஆசைகள் என்பது அவரவர்கள் மனம் சார்ந்த பதிவுகள் என்பதினால், இதுதான் ஆசை என்று எதையும் குறிப்பிட்டு கூறும்படியாக அவைகள் இருக்காது.

அதாவது, ஆசைகளின் அடிப்படையில் திருமணம் ஆக வேண்டும், குழந்தை பிறக்க வேண்டும், செல்வம் பெருக வேண்டும் என எதை யாவது ஒரு ஆசையைக் காட்டி செய்யப்படுகின்ற சில சடங்குகள் மற்றும் வேள்விகள் போன்றவைகளும் காம்ய கர்மாவில் வருகின்றது.

இத்தகைய இந்த மூன்று கர்மாக்களையும் மனிதன் கட்டாயம் செய்ய வேண்டுமா? என்றால், கட்டாயம் செய்தேயாக வேண்டும். அப்படி செயல்கள் செய்யாமல் யாராலும் இருக்க முடியாது.

சரி!, இதில் நித்ய கர்மா என்ற ஒன்றை ஒருவர் செய்யவில்லை என்றால், என்னவாகும்? என்று சற்றே யோசித்துப் பாருங்கள்.

ஒருவர் நித்ய கர்மா மூலம் பல் துலக்கவில்லை, குளிக்கவில்லை, உடை மாற்றவில்லை என்றால் என்னவாகும்? அவர் பக்கத்தில் யாருமே போக முடியாது. ஆகவே, அனுதினமும் அவைகளை அவசியம் செய்துதான் ஆக வேண்டும். அவைகளை அவர் தவிர்க்கவே முடியாது. இதன் பலன் என்ன வெனில் அவருக்கு புறத்தூய்மை உண்டாகும். இதைத்தான் நமது வள்ளுவப் பெருந்தகை இவ்வாறு கூறுகின்றார்.

**புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப்படும்.** - திருக்குறள்.

அதேசமயம், அக்னி ஹோத்ரம், சந்த்யா வந்தனம், அல்லது தீபம் ஏற்றி இறை வழிபாடு போன்றவைகளை அனுதினமும் செய்யும்போது, அங்குள்ள காற்று மாசுகள் நீங்கி, அதைச் செய்பவர்களின் உடல் மட்டுமின்றி, அவரது மனமும், வாக்கும் புத்துணர்ச்சி பெறுகின்றன.

அடுத்து, நைமித்திய கர்மா மூலம் செய்யும் செயல்களினால், அதற்கான புண்ணிய பலன்கள் உருவாவதும், அதன் வாயிலாக பாவங்கள் போவதும் உண்டு.

அதேசமயம், இந்த காமிய கர்மா மட்டும்தான் மனிதன் மனம்போன போக்கிலே செய்யக்கூடியதாக அமைகின்றது. இதன் வாயிலாக உண்டாகின்ற செயல் விளைவுகள் மட்டுமே மனிதனை பந்தப்படுத்து கின்றது. மேலும், அந்த செயல்களுக்குண்டான பலா பலன்களில் அவனை சிக்க வைக்கின்றது.

பொதுவாக, கர்மா என்பது ஒருவருக்கு விதிக்கப்பட்ட தலைவிதி அல்ல. அது அவரவர் வினைப்பயன் அல்லது செயல் விளைவு என்று கூறலாம்.

அதாவது, அவரவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் என்பது, அவரவர்கள் செய்த செயல் விளைவுகளில்தான் இருக்கிறது எனும்போது, அவர்கள் அறிந்தும், அறியாமலும் பல செயல்கள் செய்யலாம். அதிலே, அவர்களுக்கே தெரியாமல் அதன்வாயிலாக, நன்மைகள் அல்லது தீமைகள் விளையவும் வாய்ப்புகள் உள்ளது.

அத்தகைய செயல் விளைவுகள் மற்றவர் களுக்கு நன்மை அல்லது தீமையாக அமைந்தாலும் அதன்வாயிலாக, அதை செய்தவர்களுக்கும் அந்த நன்மை, தீமைகள் வந்தடைகின்றது.

அதுயெப்படி என்றால், ஒருவன் மாங்காய் விதைகளை நிலத்தில் விதைத்துவிட்டு, விளைச்சலின் பலனாக தேங்காய்களை எதிர்ப்பார்த்தால் கிடைக்குமா?

நிச்சயம் அப்படி கிடைக்காது.

காரணம், அவன் எந்த விதையை விதைத் தானோ, அதற்கான பழங்களைத்தான் பலனாக அவன் அறுவடை செய்ய வேண்டும்.

அதுப்போல, ஒருவன் தீமைகளை மட்டுமே செய்து விட்டு, நன்மைகளை எதிர்ப்பார்த்தால் கிடைக்குமா?

நிச்சயம் அப்படி கிடைக்காது.

அதனால்தான் பெரியவர்கள் "வினை விதைத் தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்!" என்று கூறி வைத்தனர். ஆகவே, விதைப்பது எதுவோ, அதுவே அறுவடை செய்யப்பட வேண்டும் என்பது நியதி.

இதன் அடிப்படையில்தான் காலச்சக்கரம் இயங்குகின்றது. அதைத்தான், "முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்!" என்றும் கூறினர். இதனை மனிதர்கள் வாழ்விலும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

ஒருவரது செயல்கள் (கர்மா) மூலம் நடைப்பெற்ற செயல் விளைவுகள்தான், அவரது கடந்த பிறவியில் இருந்து நிகழ் பிறவிக்கும், நிகழ் பிறவியில் இருந்து அடுத்த பிறவிக்கும் அழைத்துச் செல்கிறது.

இந்த சுற்றுப்பயணத்தை முடிக்க முடியாமல் போவதற்குக் காரணம், மனிதன் தனக்குக் கிடைத்த

பிரத்யேக அறிவாகிய ஆறாம் அறிவு கொண்டு, நன்மை, தீமைகளை பகுத்தறிய தவறுவதே ஆகும்.

அதாவது, நன்மை, தீமைகளைப் பற்றி அறியாமல் செய்யும் செயலும், சொல்லும் வார்த்தையும் மற்றவர்களுக்கு தீமைகளை விளைவிக்குமாயின், அதன்காரணமாக அந்த மனிதன் பாவ, புண்ணிய பதிவுகளில் சிக்குகின்றார் என்கின்றது நம்முடைய தர்மம்.

அதற்கான ஒரு கதையைப் பார்க்கலாம்.

முன்னொரு காலத்தில், அரசன் ஒருவன் "அதிதி தேவோ பவ" என்பதற்கு ஏற்ப, முன்பின் அறிமுகமில்லா தவர்கள் யாராக இருந்தாலும், தன்னை நாடி வருகின்றவர்களுக்கு உதவிகளைச் செய்யக் கூடிய உயரிய மனம் படைத்தவன் என்பதினால், தினந் தோறும் யாராவது ஒரு சந்நியாசிக்கு உணவு கொடுத்து விட்டு, அதன்பிறகு தன்னுடைய உணவை உட்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

அப்படியொரு நாள் தன்னைநாடி வந்த ஒரு சந்நியாசிக்கு உணவு கொடுக்க, அந்த உணவுப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியே வருகையில், வானில் ஒரு கழுகு தன் இரையான பாம்பு ஒன்றை தன் கால்களில் பற்றிக்கொண்டு

அவ்வழியே பறந்து சென்றது. அப்போது, அந்த கழுகின் பிடியில் சிக்கியிருந்த பாம்பு வலியின் வேதனை தாளாமல், தன் வாயிலிருந்து ஒரு சில துளிகள் விஷத்தை கக்கியதில், அது அந்த அரசன் வைத்திருந்த உணவுப் பாத்திரத்தில் வந்து விழுந்து விட்டது.

இதை அரசனும் கவனிக்காமல், அந்த உணவை அப்படியே அந்த சந்நியாசிக்கும் கொடுத்து விட்டார். அந்த சந்நியாசியும் அந்த உணவை உண்டு இறந்து போனார். இதனால், அரசன் மிகுந்த மன வேதனை அடைந்தான்.

அதாவது, நாம் செய்யக்கூடிய செயல் விளைவுகளால் மற்றவர்களுக்கு நன்மை உண்டானால் நமக்கு மகிழ்ச்சி. அதுவே, தீமை உண்டானால் நமக்கு துக்கம். ஆக, செயல்கள் எல்லாமே சுக, துக்கம் என்ற இருமைகளால் ஆனது. இந்த இருமைகள் இருக்கும்வரை, சுக - துக்கங்களுக்கு அப்பாற்பட்ட உண்மையான ஆனந்தம் ஒருபோதும் மலராது.

இப்போது, இந்த அரசன் செய்த அன்றாட செயல் அவனுக்கு நன்மை அளிக்கக்கூடிய புண்ணியக் காரியமாக இருப்பினும், அதன் வாயிலாக ஏற்பட்ட தீமையான பாவப் பலனை அவன் அனுபவிக்க வேண்டுமா? அல்லது அதை யாருக்கு

கொடுப்பது? என்பதில் கர்ம கணக்குகளை சரிபார்க்கும் சித்திரகுப்தனுக்கு குழப்பம் வந்து விட்டது.

அதாவது, அந்த பாவ கர்மாவை யார்மீது சுமத்துவது? அதாவது, உணவளித்த அரசனுக்கா? பாம்பைக் கொண்டு சென்ற கழுகிற்கா? அல்லது விஷத்தைக் கக்கிய பாம்பிற்கா? என்பதில் சந்தேகம் வந்துவிட்டது.

அதில், கழுகு அதன் இரையைத் தூக்கிக் கொண்டு சென்றது. அதில், அதன் தவறு ஒன்றும் இல்லை. அதுப்போலவே, வலியின் வேதனையால் பாம்பின் விஷம் அதன் வாயிலிருந்து வழிந்தது பாம்பின் குற்றமும் இல்லை.

அது வேண்டுமென்றே செய்யவில்லை. அவ்வாறே, அந்த அரசனும் இதை வேண்டுமென்றே செய்யவில்லை. அது அவனை அறியாமல் நடந்த விஷயம்.

'சரி! இதைப்பற்றி தன் எஜமானான எமதர்மனிடமே கேட்கலாம்,' என்று தன் குழப்பத்தைப் பற்றி எமதர்மனிடம் எடுத்துக் கூறினான் சித்திரகுப்தன்.

இதைக்கேட்ட எமதர்மன், சற்றுநேர சிந்தனைக்குப்பிறகு, இதற்கான விடை உனக்கு கிடைக்க

வேண்டுமானால், அந்த மரண சம்பவம் நடந்த அந்த ஊருக்குச் செல்! என்று கூறினார்.

சித்திரகுப்தனும் ஒரு சந்நியாசி போன்று மாறுவேடம் தரித்து, அந்த அரசன் வாழ்ந்து வந்த அந்த ஊருக்குள் சென்றான். அங்கு அரண் மணைக்குச் செல்ல வழி தெரியாமல், சாலையோரமாக வியாபாரம் செய்து கொண்டிருந்த ஒரு கிழவியிடம் அரண்மனைக்குச் செல்லும் வழி எப்படி? என்று கேட்டான்.

அவளும் சரியான பாதையை அவனுக்கு காட்டிக் கொடுத்துவிட்டு, சந்நியாசி வேடத்தில் இருந்த சித்திரகுப்தனைப் பார்த்து, உங்களுக்கு "ஒரு விஷயம் சொல்கிறேன், சற்று கவனமாக இருங்கள். அந்த அரசன் சந்நியாசிகளைக் கொல்பவன்" என்று கூறினாள்.

இந்த வார்த்தைகளை அவள் கூறி முடித்ததும், சித்ரகுப்தனுக்கு தெளிவு பிறந்து விட்டது. அந்த சந்நியாஸியைக் கொன்ற கர்மாவின் பாவவினை இந்தக் கிழவிக்கே கொடுக்க வேண்டும் என முடிவு செய்தான்.

ஆக, இந்தக் கதையிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவெனில், மற்றவர்கள் மீது பழி சுமத்தும்போது,

அதில் உண்மை இருக்குமானால், அப்படி அவர் மீது பழி சுமத்துபவருக்கு, அவர் செய்த கர்மாவில் பாதி (50%) வந்து சேரும். அதுவே, நடந்த உண்மை தெரியாமல், அபாண்டமாக மற்றவர்கள் மீது பழி சுமத்தும்போது, அது அவர்களுக்கே, முழு பலனாக கர்மவினை அனைத்தும் (100%) அப்படியே வந்து சேரும்.

எனவே, மற்றவர்கள் மீது பழி சுமத்தும் முன்பு சற்று யோசிக்க வேண்டும். பேசும்போதும் வார்த்தைகளை எச்சரிக்கையுடன் பேச வேண்டும்.

இவ்வாறு, உடல், மனம் மற்றும் வாக்கால் செய்யும், செயல் விளைவுகள் மூலம்தான் ஒருவர் வாழ்க்கையில் திடீரென உயர்வு, தாழ்வு உண்டாகிறது.

ஆக, செய்கின்ற செயல் விளைவுகள் மட்டு மின்றி, மனதாலும், மற்றவர்களைப்பற்றி அறியாமல், அவர்கள் மீது அபாண்டமாக பழி சுமத்தும் வார்த்தை களின் மூலம்கூட, ஒருவருக்கு நன்மை, தீமைகள் உண்டாகிறது என்பதை அறிய வேண்டும்.

ஆகவே, ஒருவர் இந்த இயற்கையை அறியாமல், அதை மாசுபடுத்துகின்ற அல்லது துன்புறு த்துகின்ற விளைவுகளை உண்டாக்கி விட்டார் என்றால், அதன் விளைவாக சுற்றுப்புறச் சூழல்,

தாவரங்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, மற்றும் மனிதர்கள் உட்பட எவைகள் பாதித்தாலும், அதன் பாதிப்புகள் அவைகளுக்கு நன்மையாக இருந்தால், அதை செய்தவருக்கு நன்மையும், அவை களுக்கு தீமையாக முடிந்தால், அதன் பயனாக இவருக்கு தீமையும் வந்து சேரும். அதிலிருந்து, யாருமே தப்பவே முடியாது. இதுவே, இயற்கையின் சட்டம் என்றும் கூறலாம்.

பொதுவாக, நன்மைகளை புண்ணியம் என்றும், தீமைகளை பாவம் என்றும் கருதி, பாவத்தைக் குறைக்க நாலு பேருக்கு நல்லது செய்கிறேன் எனக் கூறி, அதற்காக அதர்ம வழியிலே ஒருவர் காரியங் களை செய்தார் என்றால், அது அவருக்கு சரியாகி விடாது. அவ்வாறு, அவர் செய்த செயல் விளைவு களின் தவறுகளுக்கு தண்டனையும், அடுத்தவர் களுக்கு செய்த உதவிக்கான நற்பலன்களும் தனித் தனியே அவரை வந்து அடையும்.

ஆக, பாவமும் புண்ணியமும் ஒன்றை ஒன்று நீக்கிவிடாது.

ஒருவர் செய்கின்ற செயல் விளைவுகளில் பாவ, புண்ணியங்கள் கலந்தே இருக்கும். பாவ காரியங்கள் மட்டுமே செய்துக்கொண்டும், அல்லது நல்ல காரியங்

களை மட்டுமே செய்துக்கொண்டும் எவருமே இருக்க முடியாது.

ஏனெனில், ஒருவருக்கு நன்மையாக இருக்கும் ஒரு செயல் மற்றவருக்கு தீமையாக மாறலாம். அதுப்போலவே, தீமையாகத் தோன்றும் செயல்களின் பின்னால், மற்றவர்கள் நன்மைகளும் அடையலாம்.

பொதுவாக, ஒருவருடைய வாழ்வில் ஏற்படும் வெற்றி – தோல்விகள், சுக – துக்கங்கள், நோய் – ஆரோக்கியம், வளமை – வறுமை போன்ற அனைத்துக்கும் காரணமாக அமைவது, அவரது செயல்விளைகளினால் விளைந்த நன்மை, தீமைகளான பாவ – புண்ணியங்கள் மட்டுமே ஆகும்.

]அப்படியிருக்க, இத்தகைய பாவ - புண்ணியங்கள் என்ற கர்மாவில் இருந்து எப்படி விடு படுவது? என்றால், அதற்கு மிகவும் முக்கியமானது தர்மம் என்றால் என்ன? என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

இதில், தர்மம் என்று கூறுவதில்கூட, சிலரிடம் குழப்பங்கள் உள்ளது.

அதாவது, பெரும்பாலானவர்களுக்கு தர்மம் மற்றும் தானம் என்ற இந்த இரண்டுக்கும் வித்தியாசம் தெரிவதில்லை.

தர்மம் என்பது ஒருவர் கடைமையைச் செய்துவிட்டு, அச்செயலின் விளைவு இதுப்போன்ற பலனைத்தான் தரவேண்டுமென்று, எந்த ஒரு எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் இருப்பது.

ஆனால், தானம் என்பது, ஒருவர் செய்யும் அந்தச் செயலின் மூலம் அதற்கான நற்பலன்கள் நமக்குக் கிடைக்க வேண்டும் என்று பிரதிபலன் எதிர்ப்பார்த்து செய்வது ஆகும்.

ஆகவே, ஒருவர் தர்மப்படி மட்டுமே வாழ வேண்டும் என்றுதான் அனைத்து சாஸ்திரங்களும் வலியுறுத்துகின்றது. அதில், மனிதர்களைப் பொறுத்த வரை, தருமம் அல்லது அறம் என்றால், சரியான செயல்களைச் செய்வது, சரியான பாதையில் நடப்பது, அத்துடன் நீதி நெறி தவறாமல் வாழ்வது மற்றும் பலன்களைக் கருதாது உழைப்பது ஆகும்.

அதாவது, உலகத்திலுள்ள மனிதர்கள் இவ்வாறு பிரதிபலன் கருதாது உழைப்பது போன்றே, வெட்டவெளியில் இந்த பிரபஞ்சம் மிதக்குவதும், அதிலே உள்ள சூரியன் முதலான கோள்கள் ஓர்

ஒழுங்கில் இயங்குவதும், அதிலே பூமி என்ற ஒன்று அனைத்தையும் தாங்குவதும் **தருமம்** அல்லது **அறம்** எனப்படுகின்றது.

வேதாந்த சாஸ்திரத்தின்படி, "எது எல்லாவற்றையும் தாங்குகிறதோ, அதுவே தர்மம்" என்று கூறுகிறது.

இந்து சமய தத்துவத்தில் தர்மம் என்பது, மனிதனின் வாழ்வியல் நெறிமுறைகளில் உள்ள நான்கு புருஷார்த்தங்களில் முதலாவதாக வருகின்றது.

அதைத்தான் நாம் அறம், பொருள், இன்பம், வீடு என்று கூறுகின்றோம். இதையே, வடமொழியில், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று கூறுகின்றோம்.

இத்தகைய வழிமுறைகளில் படிப்படியாக மனிதன் பயணிக்க வேண்டும் என்றே, நம்முடைய சனாதன தர்மம் வலியுறுத்துகின்றது. அதைக் கற்றுக் கொள்ள கட்டாயப்படுத்துகின்றது.

அந்தவகையிலே, எப்படி ஒரு சிறு விதை மண்ணில் விதைத்தவுடன், விளைந்து, முளைத்து, மரமாக மாறி, மனிதர்களுக்கும், பறவைகளுக்கும் பலவாறாகப் பயன்படுகின்றதோ? அதுப்போல, மற்ற வைகளுக்கு தீங்கு செய்யாமல், பொது நன்மையைக்

கருதி, சுயநலமின்றி செய்யும் செயல்கள் மட்டுமே தர்மம் (அறம்) என்று கருதப்படும்.

அதைவிடுத்து, தன் சுயநலத்திற்காகவும், தன் தேவைகளுக்காகவும், ஒருவர் தன்னுடைய காரியங் களை செய்துக் கொண்டு, நான் தர்மம் தவறாமல் வாழ்கிறேன் என்றால், அவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறார் என்று கவனத்தில் கொள்ளவும்.

சரி! தர்ம வழியிலே மனிதர்கள் எப்படி வாழ்வது?

அத்துடன், ஒருவர் செய்யும் செயல் விளைவு களினால் வருகின்ற கர்மங்கள் எத்தகையது? அந்த கர்மங்கள் அவரை எப்படி வந்தடைகிறது? என்பதைப்பற்றி, இனி விரிவாகப் பார்க்கலாம்.

அதாவது, ஒருவர் செய்யும் செயல் விளைவு களை நம்முடைய சனாதன தர்மம் மூன்று வகைகளில் வகுத்துக் கொடுத்துள்ளது.

அவைகளை, சஞ்சிதம், ப்ராரப்தம் மற்றும் ஆகாமியம் என்று கூறப்படுகின்றது.

இப்போது, ஒருவருக்கு இந்த மனிதப்பிறவி கிடைத்துள்ளது.

அதில், அவர் எந்த செயலையும் செய்யாமல் இருந்தாலும், அல்லது பிறந்த குழந்தை எந்த செயலையும் செய்யாமல்தான் இருக்கின்றது என்றாலும், அவர்களுக்குண்டான நன்மை, தீமைகள் என்பது, அவர்களிடம் சுக, துக்கங்களாக வந்து சேரும். அவைகளை இந்த உடலின் மூலம் அனுபவிப்பதை ப்ராரப்தம் எனப்படுகின்றது.

அத்துடன், இந்தப்பிறவியில் இதே உடலைக் கொண்டு, சூக்ஷுமமான கண்களுக்குத் தெரியாத மனதின் மூலம் எழுகின்ற எண்ணங்களின் வாயிலாக விளைகின்ற தற்போதைய செயல் விளைவுகளை **ஆகாமியம்** எனப்படுகின்றது.

அதாவது, அத்தகைய எண்ணங்களே அவர்களுடைய பிராரப்த கர்மாவினால்தான் இயக்கப் படுகின்றது. அதனால்தான் அதற்கான செயல்களை அவர்களைச் செய்ய வைக்க, அந்த பிராரப்த கர்மா தூண்டுகின்றது.

இவ்வாறு, இந்தப்பிறவியில் செய்யும் செயல் களைப் போன்றே, இதற்கு முன்பாகப் பல பிறவி களாக சேர்த்து வைத்துக்கொண்ட பல்வேறு செயல் விளைவுகளின் ஒட்டுமொத்த பதிவுகளுடன்கூடிய நல்வினை, தீவினைகள் (பாவ, புண்ணியங்கள்)

அனைத்தும், ஒன்று சேர்ந்து பலன் அளிக்கக்கூடிய வகையிலே உள்ளது சஞ்சிதம் எனப்படுகின்றது.

எனவே, இதில் ஒருவர் கொண்டுவந்த பிராரப்த கர்மாவை அவரால் எந்த வகையிலும் மாற்ற முடியாது. அதன்படியே அவருக்கு அனைத்தும் நடக்கும்.

அதுப்போலவே, அவர் ஏற்கனவே பல்வேறு பிறவிகளாகச் செயல்கள் பல செய்து சேகரித்து வைத்துள்ள சஞ்சித கர்மாவையும் ஒன்றும் செய்ய முடியாது.

அது இன்னும் பலப் பிறவிகளைக் கொடுக்க காத்திருக்கின்றது.

ஏனெனில், இந்தப் பிறவியில் கொண்டுவந்த பிராரப்த கர்மா என்பது, ஒட்டுமொத்த சஞ்சித கர்மாவின் ஒரு பகுதியே ஆகும்.

அவ்வாறு, அந்த பிராரப்த கர்மாவை கொண்டுவந்து, இந்தப் பிறவியில் சுக, துக்கங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும்போதே, புதியதாக இப்போது செய்கின்ற செயல் விளைவுக்கான கர்ம பலன்களை சேர்த்துக் கொள்வதுதான் **‘ஆகாமிய கர்மா’** எனப்படுகின்றது.

இந்த புதிய கர்மவினைகள் அவர் இறந்தவுடன் மீண்டும் ஏற்கனவே இருக்கின்ற சஞ்சித கர்மாவுடன் சென்று சேர்ந்துக்கொண்டு, அந்த கர்ம மூட்டையைப் பெரிது படுத்திவிடும்.

சரி!, இதில் பிராரப்தம் மற்றும் சஞ்சிதம் ஆகிய இரண்டு கர்மாக்களை ஒன்றுமே செய்ய முடியாது எனும்போது, ஒருவருக்கு மாற்றம் செய்யக்கூடிய ஒரு கர்மா உண்டென்றால், அது தற்போது அவரிடம் உள்ள “ஆகாமிய கர்மா” மட்டுமே ஆகும்.

அத்தகைய கர்ம நியதிகளுக்குட்பட்டு வாழ்கின்ற அத்தனை சீவராசிகளிலும், மனிதனைத் தவிர மற்ற அனைத்தும் அவைகளின் பிராரப்த கர்மாவை அனுபவித்துக் கொண்டே இருக்கின்ற காலங்களில் அவைகளினால் புதியதாக செய்யும் செயல் விளைவுகள் அவைகளின் ஆகாமிய கர்மாவாக மாறாது.

அதற்குக்காரணம், அவைகள் இதை "நான் செய்கிறேன்" என்ற புத்தி கொண்டு செய்வதில்லை. அதனால், அவைகளினால் செய்யப்படுகின்ற புதிய வினைகள் (செயல் விளைவுகள்) அவைகளுக்குச் சேர்வதில்லை. அதாவது, ஆடு, மாடு, நாய் போன்ற பிராணிகள் தன்னிடம் இருக்கும் புத்தி சக்தியைக் கொண்டு, தன்னுடைய தற்காப்புக்காக மட்டுமே

முட்டுவது, கத்துவது, கடிப்பது போன்ற செயல்களை செய்யும். அதனால், அவைகளுக்கு எந்த விதமான பாவ கணக்கும் கிடையாது.

ஆனால், மிக அரிதான உடல், மனம் படைத்த மனிதன் மட்டுமே தனக்கு கிடைத்துள்ள பிரத்யேக பகுத்தறிவாகிய, ஆறாம் அறிவான புத்தி சக்தியினால் அஹங்காரம் கொண்டு, அதை "நான் செய்கிறேன்", 'இது என்னுடையது' என்று செயல்கள் செய்வதினாலேயே, புதிய செயல் விளைவுகளான ஆகாமிய கர்மா அவனுக்கு உண்டாகின்றது.

பொதுவாக, மனிதனிடம் காணப்படுகின்ற விவேகம் என்கிற பகுத்தறிவு புற விசயங்களை அறிவதின் காரணமாக மாறுபடுகின்றது. அந்த வகையிலே அவன் கற்றுக் கொள்ளக்கூடிய கல்வி முறைகள்கூட காரணமாக இருக்கின்றது.

ஆத்மா எது?, மற்ற வஸ்துக்கள் என்ன? என்று சிந்தனை செய்வது ஒரு விதமான விவேகம் என்றாலும், அவன் கற்ற கல்வியின் மூலம் அடைந்த அந்த பொருளின் தன்மையை அறிந்து கொள்வது என்பது, அவனது மனதில் அவன் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களைச் சார்ந்து இருக்கின்றது.

அதேசமயம், நன்மை தீமைகளைப் பகுத்தறியக்கூடிய அதே புத்தி சக்தியைக் கொண்டு, எதை செய்ய வேண்டும்?, எதை செய்யக்கூடாது? என்ற புரிதலுடன் வாழ்ந்துக் கொண்டு, அவ்வாறு வாழும் காலத்திலேயே அரிதான இந்த மனிதப் பிறவியின் மகத்துவம் என்ன? என்று விசாரித்து அறிய ஆவல் கொண்டான் என்றால், அவன் மட்டுமே, என்றும் அழியாத தன் உண்மை சொரூபத்திற்குள் நுழைய முடிகின்றது.

அத்தகைய தன் உண்மை சொரூபத்தினை அறிந்துக் கொண்டவர்கள் மட்டுமே, இதுவரை தன்னால் மாற்ற முடியாது என்று கருதிக்கொண்டிருந்த கர்ம வினைகளைக் கூட மாற்றி அமைத்துக்கொண்டு, தன்னை போன்றே, மற்றவர்களின் கர்மவினை களையும் மாற்றிக் காட்டுகின்றார்கள்.

ஆனால், இது தன்னை அறிந்துக் கொண்ட தத்துவ ஞானிகளைத் தவிர மற்ற சாதாரண மனிதர்களாலும், ஆறறிவுக்கு உட்பட்ட எந்த சீவர்களாலும் முடியவே முடியாது.

ஆகவே, உயரிய அறிவான ஆறாம் அறிவைக் கொண்டு, அறிய வேண்டிய அரிதான சாஸ்திர விசயங்களை கேட்டல், சிந்தித்தல் மற்றும் அதிலேயே நிலைப்பெற்று இருத்தல் போன்ற சிரண, மனன, நிதித்யாஸனம்

மூலம், அறிந்துக்கொண்ட உயரிய அறிவின் வெளிப் பாட்டினால், அரிய பல கண்டுபிடிப்புகள் இந்த உலகத்தில் கண்டறியப்பட்டன.

அவைகள், புறத்திலே பயன்படுத்தக்கூடிய புற சாதனங்களாக விஞ்ஞானத்திலும், அகத்திலே பயன் படுத்தக்கூடிய அகசாதனங்களாக மெய்ஞ்ஞானத்திலும் வெளிப்பட்டது.

புற சாதனங்கள் பலவற்றையும் இன்று நாம் நம் பயன்பாட்டில் வைத்திருக்கின்றோம். ஆனால், அக சாதனங்கள் கொண்ட அரிய நூல்களை நாம் அப்புறப்படுத்தி விட்டோம். அதற்குக் காரணம், கல்வி முறையில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம் என்று கூறலாம்.

அதிலே, நம்முடைய அகத்தை காட்டும் அதியற்புதக் கண்ணாடி போன்ற அரிய சாதனம் ஒன்று உண்டென்றால், அதுவே **வேதம்** எனப்படு கின்றது.

வேதம் என்றால், '**வித்**' என்ற வடமொழிச் சொல்லை வேராகக் கொண்டது. "**வித்**" என்றால் சமஸ்கிருதத்தில் '**அறிதல்**' என்று பொருளாகும்.

அதாவது, வேதங்கள் என்பதற்கு "உயர்வான அறிவு" என்று பொருள். ஆகவே, இதை ஏதோ வேதியர்கள் ஓதிக்கொண்டிருக்கின்ற பாடல்கள் என்று மட்டுமே கருதிக் கொள்ளக்கூடாது. அவைகள் மனிதனை புனிதனாக்கக்கூடிய இரண்டு முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

அதிலே, முதல் பகுதி கர்ம காண்டம் என்றும், இரண்டாம் பகுதி ஞான காண்டம் என்றும் அழைக்கப்படுகின்றது.

இதிலே, மனிதன் செய்யும் செயல் விளைவுகள் எத்தகையதாக இருக்க வேண்டும் என்று முதல் பகுதியும், அத்தகைய செயல் விளைவுகளினால் உண்டாகும் மனத்தூய்மையின் மூலம், மனிதன் அடையப்போகும் பலன்கள் பற்றி இரண்டாம் பகுதியும் எடுத்துக் கூறுகின்றது.

அதன் அடிப்படையிலே, மனிதன் புனிதனாக மாறிவிட்டால், அவனால் அனைத்து கர்மாக்களையும் மாற்ற முடியும். அத்துடன் மற்றவர்களின் கர்மாக் களையும் குறைக்க முடியும்.

அது எப்படியென்றால், ஒரு குழந்தை பிராரப்தக் கர்மா வசத்தால், தான் கொண்டு வந்த கர்ம வினையில், அதற்கு கால் ஊனமாக பிறக்க

வேண்டும் என்பது நியதி என்று வைத்துக் கொள்ளுங்கள்.

இப்படி பிறந்த குழந்தை நிச்சயம் அதன் பிராரப்தக் கர்மாவில் உண்டான ஊனமான அந்தக் காலை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள முடியாது.

ஆனால், அந்த நொண்டிக் காலை வைத்துக் கொண்டு நடக்க முடியாமல் இருப்பதற்குப் பதிலாக, ஒரு ஞானியின் கண்டுபிடிப்பாகிய செயற்கைக் காலைப் பொருத்திக்கொண்டு எளிதாக நடக்கவும் முடியும்.

இது மனிதனிடம் மட்டுமே காணப்படுகின்ற உயரிய அறிவு என்பதினால், அவனது மகத்தான சாதனைகள் மனிதகுல முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல, மற்ற சீவர்களின் வாழ்வாதாரத்திற்கான அருமையான வழி என்றும் அறிய வேண்டும்.

சரி! இந்த கர்ம வினைகளைக் கடந்து, அந்த மகத்தான அறிவுடன் மனிதன் எப்படி இணைவது என்றால், அதற்கான அழகான வழிமுறையை நமது திருவள்ளுவர் எடுத்துக் கூறுகின்றார்.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற. – திருக்குறள்.**

ஆக, இவரும் இங்கு அனைத்து அறங்களிலும் உயர்வான அறம் (தர்மம்) எதுவெனில், அது மனதில் மாசற்று இருப்பதே ஆகும் என்கிறார்.

மனம் மாசற்று இருத்தல் என்றால் என்ன?

ஒருவர் செய்யும் செயல்களை பற்றின்றி செய்ய முடியுமானால், அவரது மனம் மாசற்று இருக்கின்றது என்று பொருள்.

அட இவ்வளவுதானா? அப்ப, இனிமேல் நாம் செய்யும் செயல்கள் பற்று இல்லாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது.

ஏனெனில், தற்போது நாம் செய்யும் செயல்கள் நமக்காக ஒரு தேவையைக் கருதியே உள்ளது. அதில் பற்று இல்லை என்று கூறிவிட முடியாது.

அவைகள் உத்தியோகம் பார்ப்பதாக இருந்தாலும், ஊர்க் கோவிலில் அன்னதானம் செய்வதாக இருந்தாலும், உறவுகளுக்கு உதவி செய்வதாக இருந்தாலும், படிப்பதற்கு பணம் தருவதாக இருந்தாலும், அதில் ஒரு அவசியம் அல்லது தேவை நமக்கு இருக்கின்றது.

அதுவும், இன்று பெரும்பாலானவர்கள் தாங்கள் அன்னதானம் செய்வதை அவர்களுடைய ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸப் போன்றவைகளில் போட்டோ போட்டு, தங்களை விளம்பரம் செய்துக் கொள்கிறார்கள்.

அத்துடன் மட்டும் அவர்கள் நின்றுவிடு வதில்லை. அதை வைத்துக்கொண்டு, மற்றவர்களிடம் பணம் நன்கொடைகளாகப் பெற்றுக் கொள்கிறார்கள்.

அதாவது, ஒருவரால் அன்னதானம் செய்ய முடியவில்லை என்பதற்காக, இதுப்போன்ற பொதுக் காரியங்களில் இருப்பவர்களிடம் மற்றவர்கள் பணம் கொடுத்து இவர்களை செய்ய வைக்கின்றனர். அதனால், இவர்களும் கெட்டு, அவர்களுக்கும் பணத்தாசை உண்டாக்கி விடுகின்றனர்.

ஏன் அப்படி செய்ய வேண்டும்?

அதற்கான அவசியம் என்ன உள்ளது? என்று பார்த்தால், அவர்களுக்கு புண்ணியம் என்ற ஒரு தேவை உள்ளது.

இதுவல்ல, நிஷ்காமிய கர்மம்.

இங்கு நிஷ்காமிய கர்மம் என்பது கர்மயோகம் என்று பொருள். அட, அதைத்தான் 'நான் செய்துக் கொண்டிருக்கிறேன்' என்று ஒருவர் நினைத்து விட்டால், அவர் மனம் மாசற்ற நிலையில் இல்லை என்று கூறலாம்.

ஆம்! இங்கு கர்மயோகம் என்பது ஏதோ விளையாட்டு சமாச்சாரம் அல்ல. கர்மயோகம் என்பது செய்யும் செயல் விளைவுகளினால் பாதிக்கபடாத நிலை என்று கொள்ளலாம்.

அதாவது, செய்யும் செயல் விளைவுகளினால் எத்தகைய பலன்கள் வந்தாலும், அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல். அது நன்மையாக வந்தாலும், தீமையாக வந்தாலும் அப்படியே மனம் கோணாமல் ஏற்றுக் கொள்ளுதல். இதுவே மனத்துக் கண் மாசற்று இருத்தல் என்பதாகும்.

ஆனால், நாம் அப்படியா இருக்கிறோம்?

இப்போது, நாம் ஒரு வேலைக்கு போகிறோம். அனைத்தையும் நிஷ்காமிய கர்மாவாகவே செய்கிறோம் என்று நினைத்துக் கொள்கிறோம்.

அதைக் கர்மயோகம் என்றும் கூறிக்கொள்கிறோம். அதேசமயம், அந்த மாத இறுதியில் நமக்கு சம்பளம்

போடும்போது, இருபதாயிரம் சம்பளத்திற்கு பதிலாக ஐந்தாயிரம் மட்டும் சம்பளமாகத் தருகிறார்கள் என்றால், நாம் ஏற்றுக் கொள்வோமா?

யோசித்துப் பாருங்கள்!

நிச்சயம் நம் மனம் அதை ஏற்காது. அந்த முதலாளியிடம் சண்டைக்கு போவோம். ஆனால், பேசும்போது மட்டும் நான் கர்மயோகி என்றும், என்னுடைய செயல்கள் எல்லாம் பலன் கருதாத நிஷ்காமிய கர்மம் என்றும் கூறிக் கொள்வோம்.

பொதுவாக, இதுப்போன்று எந்த முதலாளிகளும் செய்ய மாட்டார்கள் என்ற தைரியத்தில் இருப்பதினால்தான் நாம் இதுப்போன்ற கர்மயோகி, நிஷ்காமிய கர்மி என்றெல்லாம் கூறிக் கொள் கிறோம்.

ஆனால், அப்படி ஒரு நிலை கொரோனா நோய் காலத்தில் பெரும்பாலானவர்களுக்கு வந்த போது, எங்கே போனர்கள் இந்த கர்மயோகிகள்? அல்லது நிஷ்காமிய கர்மிகள்?

நம்மை நாமே எப்படி ஏமாற்றிக் கொள்கி றோம்? என்பதை நம்முடைய மனதைக் கொண்டு தான் விசாரித்துப் பார்க்க வேண்டும்.

மற்றவர்களுக்கு போலியாக வாழ்வது அல்ல கர்மயோகம். அதுவல்ல நிஷ்காமிய கர்மம்.

கர்மயோகம் அல்லது நிஷ்காமிய கர்மம் என்றால் என்ன? என்பதை நமது வள்ளுப் பெருந்தகையும் கீழ்வரும் குறளில் தெளிவு படுத்துகிறார்.

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன் - திருக்குறள்.

அதாவது, இன்பமோ துன்பமோ, எது வரினும் அதைப்பற்றிய உறுத்தல் இல்லாத மனம் இருக்க வேண்டும் என்கிறார்.

அதாவது, இன்பம் வந்தபோது, அதற்காக ஆர்பரிக்காமல் அதை அப்படியே ஏற்றுக்கொண்ட மனம் படைத்தவன், தனக்கு துன்பம் வரும் போதும், அதற்காக வருந்தாமல் அதை அப்படியே ஏற்றுக் கொள்வான் என்கிறார். இவனைப் போன்றவர் களைத்தான் கர்மயோகி அல்லது நிஷ்காமிய கர்மி என்று கூற வேண்டும்.

ஆகவே, அறநெறியில் வாழும் தன்னுடைய வாழ்நாளில் வருகின்ற கடமைகளை செய்யும்போது, அதன் செயல் விளைவுகளால் இதுப்போன்ற பலன்கள்தான் வரவேண்டும் என்ற ஒரு எண்ணம்

இல்லாத நிலையைத்தான் இங்கு மனத்தூய்மை அல்லது கர்மயோகம் என்று கூறப்படுகின்றது.

இதைத்தான் "சும்மா இருத்தல்" என்றும் கூறப்படு கின்றது. அதாவது, உடலிலே செயல் செய்துக் கொண்டு, மனதினால் சும்மா இருப்பது ஆகும்.

அதாவது, இந்த பிரபஞ்சம் பல்வேறு வகைகளில் தனக்கு உதவி புரிவதை உணர்ந்துக் கொண்டு, அதற்குண்டான கடனை திருப்பி செலுத்து வதன் பொருட்டு, தன்னை அதற்காகவே அர்பணித் துக்கொண்டு, செய்யும் செயல் விளைவு களைத்தான் பயன் கருதாத செயல் என்னும் பொருளில் 'நிஷ்காமிய கர்மம்' அல்லது கர்மயோகம் என்று கூறப்படு கின்றது.

இதுதான், 'செயலில் செயலற்ற தன்மை!' என்றும் கூறப்படுகின்றது.

ஆக, செயல்கள் செய்யாமல் சும்மா இருப்ப தல்ல இங்கு "**சும்மா இரு!**" என்பதன் பொருள் என்பதையும் நன்கு புரிந்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே, தன்னை அறிந்துக்கொண்ட தத்துவ ஞானிகளால் மட்டுமே தன்னிடம் கொடுக்கப்பட்ட பிரத்யேக பகுத்தறிவினைக் கொண்டு, தன் கர்ம வினைகளை மாற்றியமைத்துக் கொள்வது மட்டு

மல்லாமல், பலரது கர்ம வினைகளை (வாழ்க்கையை) மாற்றி அமைத்துக் கொடுக்கவும் முடியும்.

அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்?

கர்மபீஜம் (வினையின் விதை) நாசத்திற்கான ஒரே வழி ஆத்ம ஞானம் அடைவது மட்டும்தான் என்கின்றது வேதம். அதாவது, கர்ம பீஜம் நசித்து விட்டால் இறப்பு – பிறப்பு எனும் சக்கர சுழற்சியிலிருந்து தப்பிக்க முடியும்.

அதாவது, விதை நசிந்துவிட்டால் செடி முளைத்து மரம் ஆகாதல்லவா?

இதற்கான வழிமுறைகளை நம் சனாதன தர்மம் வாழ்வியல் நெறி முறைகளாக நமக்காக வகுத்துக் கொடுத்துள்ளது.

அவைகள், பிரம்மச்சரியம், இல்லறம், வானபிரஸ்தம் மற்றும் சந்நியாசம் என்பனவாகும்.

இதில் நாம் எந்த நிலையில் இப்போது இருந்துக் கொண்டிருந்தாலும், அதற்கான வாழ்க்கை என்பது, அறம் (தர்மம்) சார்ந்து வாழ வேண்டும்.

அதாவது, உடல், மனம் மற்றும் வாக்கால் செய்யும் செயல் விளைவுகள்தான் நம் ஒவ்வொருவரையும் வழி நடத்துகிறது என்பதினால், நம் தர்மம் வகுத்துக் கொடுத்த செயல் விளைவுகளான நித்யம், நைமித்யம், காம்யம் என்ற மூன்றிலும் காமிய கர்மா என்று கூறப்படு கின்ற செயல் விளைவுகள் விசயத்தில் சற்று கவனம் தேவை.

ஏனெனில் அதுமட்டும்தான் நம்முடைய பிராரப்த கர்மா அடிபப்டையில் எண்ணங்களாக வெளிப்படுவதால், அவ்வாறு வெளிப்பட்ட எண்ணங்களை, செயலாக்கம் செய்ய வேண்டியதின் அவசியம் கருதி, அதனை செய்யலாமா? அல்லது வேண்டாமா? என்பதை நமக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேக பகுத்தறிவின் துணைக்கொண்டு, சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொதுவாக, மனதை அடக்க முடியாமல், வெறும் இந்திரியங்களை மட்டும் அடக்கி வாழ்வபன் பொய்யான ஒழுக்கத்திற்கு உதாரணமாகிறான் என்கிறார் தமது கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர்.

அதுபோலவே, பகவான் ஸ்ரீரமணரும் பின் வருமாறு கூறுகிறார்.

## கர்மா

சீவாத்மாக்கள் இந்த உலகத்திற்கு வரும் பொழுதே அவர்களது இந்த பூத உடல் என்னென்ன சுக, துக்கங்களை அனுபவிக்க வேண்டும் என்று தீர்மாணிக்கப்பட்டு விடுகிறது. ஆகவே சீவாத் மாவிற்கு எந்த கர்மத்தை ஏற்றுக் கொள்வது? எதை நிராகரிப்பது? என்பதற்கான சுதந்திரம் கிடையாது.

அவைகள் செய்ய வேண்டியவைகளை செய்தேயாக வேண்டும். அனுபவிக்க வேண்டிய வைகளை அனுபவித்தேயாக வேண்டும். அவைக ளுக்குள்ள சுதந்திரமெல்லாம் தன் மனதை உள் முகமாகத் திருப்பி, மனதளவில் அந்த கர்மங்களை எற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ செய்யலாம்.

அதாவது கர்ம பலன்களின் மீதுள்ள பற்றுதலை தக்க வைத்துக் கொள்ளலாம் அல்லது நிராகரித்து விடலாம். ஏன்? அப்படி என்றால், அது இயற்கையின் நியதி அல்லது தெய்வ நிச்சயம் என்றுதான் கூற வேண்டும்.

அதுப்போலவே, யாரும் இந்த உலகில் செயலாற்றாமலிருப்பதில்லை. ஏனென்றால், பிரகிருதி யிலிருந்து ஒவ்வொரு சீவாத்மாக்களும் பலதரப்பட்ட குணங்களை பெறுகிறார்கள். ஒவ்வொரு உயிரினமும் தன் வயமின்றி கர்மம் செய்விக்கப் படுகிறார்கள் என்கிறார் பகவான் ஸ்ரீகிருஷ்ணர்.

அதாவது, உண்பது, உறங்குவது, உடலுறவு கொள்வது என எல்லாமே கர்மங்கள்தான். தன்னை யறிந்த தத்துவ ஞானிகளைத்தவிர, மற்ற எதற்கும், எவருக்கும் இயற்கையில் கர்மத்தை விடும் சுதந்திரம் கிடையாது.

ஆகவே, பொதுவாக செய்யக்கூடிய கர்மங்கள் ஏற்கனவே கூறியபடி மூவகைப்படும் என்றாலும், அதில் செய்யக்கூடிய கர்மங்கள் பின்வருமாறு நடைமுறையில் உள்ளது. அவைகளை இன்னும் சற்று எளிமையாக புரிந்துக் கொண்டால் பறித்தல், பங்கிடுதல், கொடுத்தல் அல்லது படைத்தல் எனலாம்.

அதாவது, சக பிராணிகளின் உணவை, இருப்பி டத்தை, அவைகளுக்கு உரிய பொருள்களை தன் நன்மைக்காக தட்டிப் பறிப்பது பறித்தல் ஆகும். தன்னுடைய உடைமைகளை சக பிராணிகளுடன் பகிர்ந்து அனுபவித்தல் பங்கிடுதல் ஆகும்.

பொதுவாக, அன்றைய காலகட்டங்களில் நம் குழந்தை பருவத்தில் நம்முடைய கிராமங்களில் கீரை விதையை வெயிலில் காய வைப்பார்கள். அப்போது, நம் வீட்டில் உள்ள அம்மா கீரை விதையுடன் கொஞ்சம் அரிசியையும் கலந்து காயப் போடுவார்கள்.

அதற்கான காரணம் கேட்டால், உணவைத் தேடி வருகின்ற எறும்புகள் ஏமாந்து போகக்கூடாது. அதற்காகத்தான் அந்த விதையுடன் அரிசியை கலக்கிறேன்.

அவைகள் அரிசியை மட்டும் எடுத்துக்கொண்டு விதையை விட்டுவிட்டு போகும் என்பார்கள். இதுதான் மற்றவர்களுக்கு பங்கிட்டு, தானும் உண்ணும் பங்கிடுதல் முறையாகும்.

ஆனால், இன்றோ நாம் கீரை விதையை எறும்பு தின்னாமலிருக்க பூச்சி மருந்தை கலந்து வைக்கிறோம். இது இன்றைய கல்வி முறையில் வந்த களங்கம் என்று கூறலாம். இதைத்தான் பறித்தல் என்று கூறப்படுகின்றது.

அதுப்போலவே, அன்று காட்டுப் பகுதியில் வசித்து வந்ததால், தண்ணீர் தேடி வரும் யானைகளுக்கு அவைகள் அருந்தக்கூடிய நீர் நிலை தேக்கத் தொட்டிகளை அமைத்து விடுவார்கள். அவைகள் வந்து, அங்கு நீர் அருந்திவிட்டு, சற்று இளைப்பாறிவிட்டு போகும்.

அதுமட்டுமின்றி, விவசாயத்தில் வீணான வாழைப்பழங்கள், கரும்புகள் போன்றவைகளை இதுப்போன்ற மற்ற சீவராசிகளுக்கு உண்ணக்

கொடுப்பார்கள். இன்னும் சிலர் அவைகளுக்கு எடுத்து வைத்துவிட்டுத்தான் விற்பனைக்கு கொண்டு செல்வார்கள். ஆனால், இன்று யானைகளை தடுக்க மின்சார வேலிகள் அமைக்கிறோம்.

இது இன்றைய சுயநலத்தில் ஊன்றி நிற்கும் கலாச்சாரம் எனலாம்.

மூன்றாவது வகை கர்மம் தனக்கு இருக்கிறதோ, இல்லையோ? மற்றவர்களுக்கு படைத்து அவர்கள் அடையும் சந்தோஷத்தை தன் சந்தோஷமாக அனுபவிக்கின்ற மனோபாவம்.

இதைத்தான் யக்ஞும் என்கின்றது கீதை. இந்த மனோபாவத்துடன் செய்கின்ற கர்மங்களெல்லாம் யக்ஞும் அல்லது நிஷ்காமிய கர்மம் அல்லது கர்மயோகம் என்று பெயர் பெறுகின்றது. இதுவே படைத்தல் கர்மா ஆகும்.

பொது நலத்தில் தன் நலம் அடங்க்யிருக்கிறது என்ற அசையாத நம்பிக்கை, தியாக புத்தியோடு செய்யும் சேவைகள், உலகத்தின் நன்மைக் கென்றே செய்யப்படுகின்ற கர்மங்கள் இவையெல்லாம் ஈசுவர ஆராதனைக்கு ஒப்பாகும். அவைகளே யக்ஞுங்கள் என்கின்றது சாஸ்திரம்.

## கர்மா

கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கௌந்தேயா நீ இதுப்போன்ற யக்ஞங்கள் மூலம் ஈஸ்வரனைக் காண்பாயாக! என்கிறார். எனவே, இங்கு இருப்பதெல்லாம் இறைவனே என்ற எண்ணம் எப்போது வரும் என்றால், அது மனதில் மாசற்ற ஒருமைத் தன்மை வரும்போதுதான் என்கிறார்கள் ஞானிகள்.

ஆகவே, மனத்தூய்மை உண்டாக வேண்டு மானால், மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளைச் சரியாக செய்ய வேண்டும். அத்துடன் அத்தகைய செயல்கள் மற்றவைகளுக்கு பாதிப்புகளை உண்டாக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு, செய்கின்ற செயல்களை நான் செய்கிறேன் என்ற அஹங்காரம் இன்றியும், இவைக ளெல்லாம் ஈஸ்வர காரியம் என்றும், அதற்கான கருவியாக இந்த உடல் உள்ளது என்றும், ஒரு தெளிந்த புரிதலுடன் செயல்கள் செய்யப்பட வேண்டும்.

எவ்வாறு, நம் வீட்டில் உள்ள மின்சார சக்தியின் மூலம், மின்விசிறி காற்று கொடுப்பதும், மின் விளக்கு ஒளியைக் கொடுப்பதும், அதுப்போலவே, ஒரு செல்போனில் இந்த ஊரில் இருந்துக்கொண்டு, மற்றொரு ஊருக்கு பேசுவதும், அதில் பாடல்கள் கேட்பதும், மின்சார அடுப்பில் சமையல் செய்வதும்

என எல்லாவற்றிற்கும் அந்த மின்சக்தியே ஆதாரமாக இருப்பதுப் போல, ஒரே ஈஸ்வர சக்தி இங்கு வெவ்வேறு உடல்களின் வாயிலாக பல்வேறு பணிகளை செய்கின்றது என்ற புரிதல் வரவேண்டும்.

மேலும், ஒரே மின் சக்தியால் எவ்வாறு ஒலி, ஒளி, காற்று முதலியவைகள் நமக்கு கிடைத்தாலும் அவைகளின் வெளிப்பாடாகிய ஒளி, ஒலி, காற்றி னுடைய நிலையை அதிகரித்துக் கொள்வதும், குறைத்துக் கொள்வதும் மின் சக்தியில் இல்லை. அது நம்முடைய கையில்தான் இருக்கின்றது.

அதாவது, இத்தனை பொருட்களை அந்த மின்சக்தி இயக்கினாலும், அது இயக்குவதை நாம் நமக்குத் தேவையான வகையிலே உபயோகப்படுத்தி கொள்வதற்கு, நம்முடைய கையினால்தான் நமக்கு தேவையான காற்றை அல்லது ஒலியை குறைத்தோ, கூட்டியோ நமக்குத் தேவையான அளவுக்கு வைத்துக் கொள்கிறோம்.

அதுப்போல, ஈஸ்வர சக்தியும் எல்லா உடல்களி லிருந்து, அவைகளை இயக்கிக் கொண்டிருந்தாலும், நம்முடைய புத்தியை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த வகையிலே நம்மிடம் இருக்கின்ற பகுத்தறிவைக் கொண்டு, பயனற்ற காரியங்களில் ஈடுபடுவதை குறைத்துக் கொள்வது நலம்.

இங்கு, பகுத்தறிவு என்பது அறிந்த உண்மையை விரிந்து தெரிந்து கொள்வது என்று பொருள்.

இந்தப் பகுத்தறிவு மனிதனுக்கு மட்டுமல்ல. பல உயிரினங்களுக்கும் இருக்கின்றன. ஆடு, மாடு, நாய் போன்ற பிராணிகள், மற்றும் சில ஜந்தக்களும்கூட உள்ளது.

மிருகங்கள்கூட தான் உண்ணக்கூடிய உணவை நல்ல வகையில் உண்ண வேண்டும் என்று அறிந்துக் கொண்டுதான் உட்கொள்கிறது.

விஷ சம்பந்தமான பொருட்கள் இருந்தால், அதை தன்னுடைய பகுத்தறிவு சிந்தனையினால் அறிந்துக் கொண்டு ஒதுக்கி விடுகிறது.

ஆனால், மனிதன் மட்டும் தன் சுயநலத்தினால் அந்த பொருளின் தன்மையை அறிந்துக்கொண்டு, அதன் நன்மை, தீமைகளைப் பற்றி தெரிந்துக் கொண்டு, அதை ஏற்றுக்கொள்வது மட்டுமில்லாமல், அது எப்படி நன்மை பயக்கின்றன, அல்லது தீமை பயக்கின்றன என்பதை புரிந்து, அதன்படி நல்ல பொருட்கள், தீய பொருட்கள் செய்வதற்கு தயாராகிறான்.

அந்த வகையிலேதான் அணுகுண்டையும், அணு ஆயுதங்களையும் கண்டறிந்தான். அதே அணுவில்தான் "அணுவில் அணுவினை ஆதிபிரானை" கண்டறிந்தான்.

ஆனால், மனிதனைத்தவிர மற்ற சீவர்கள் அதன் நன்மை, தீமைகளைப் பற்றி அறிந்துக் கொண்டவுடன் அது வேண்டும் அல்லது வேண்டாம் என்று அப்போதே முடிவு செய்து விடும். அதற்கு தேவையற்றவைகளில் இருந்து அவைகள் ஒதுங்கி விடும்.

ஆனால், அவைகளைப் போன்றே மனிதன் ஒதுங்கவும் செய்வான். அவைகளை ஆக்கவும் செய்வான். அவைகளை அழிக்கவும் செய்வான். (அல்லது) விஷப் பொருட்களை மற்றவர்களுக்கு கொடுத்து இம்சை செய்யவும் செய்வான். இதுவே மனிதர்களிடம் காணப்படுகின்ற புத்தி சக்தியின் நன்மை, தீமைகள் என்று அறிய வேண்டும்.

அதாவது, நமக்கு வேண்டியதெல்லாம் இந்த உலகத்தில் நல்லபடியாக வசதியாக வாழ வேண்டிய வாழ்க்கை. அதற்குத் தேவை அதிகமான பணம், பொருளாதாரம் எனும்போது, இந்த உலகத்தில் எல்லாருமே பணக்காரர்களாக ஆகி விடுவதாகவே வைத்துக் கொள்வோம்.

நிம்மதியாக, சந்தோசமாக அவர்களால் இருக்க அது உதவுமா?

பணக்காரர்கள் நிறைந்த நாடுகளைப் பாருங்கள். அங்கே எத்தனை சண்டை சச்சரவுகள், அவர்களிடம் உண்மையில் நிம்மதியின்மை மட்டும்தான் இருக்கின்றது. அவர்களுக்கு உறங்கினால் உறக்கம் வரவில்லை என்பதினால், பெரும்பாலானவர்கள் மன நோயாளிகளாகத்தான் இருக்கின்றார்கள். அதற்கான மன நிலை மருத்துவம் மற்றும் மருந்துகள் மிக அமோகமாக விற்பனை நடக்கின்றது.

அவர்கள் எல்லோரிடமும் அதிகமாகப் பணம் இருந்தாலும், அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும், மற்றவரைவிட அதிகம் பணம் இருக்க வேண்டும் என்கிற ஆசையும் இருப்பதினால், அவர்களிடம் போட்டியும், பொறாமையும் இருந்து கொண்டேதான் இருக்கின்றது.

நமக்கு வேண்டிய அனைத்தும் இருந்தால் மட்டும் போதாது. இன்னொருத்தனைவிட அதிகமாக இருக்க வேண்டும் என்ற போட்டி மனப்பான்மையே மனித சுபாவம்.

அதன்காரணமாக, கீழான வேலைக்கு அங்கு ஆட்கள் கிடைப்பதில்லை. ஆதலால், அவர்கள்

நம்மைப் போன்ற பொருளாதார வளர்ச்சியில் பின் தங்கி இருக்கின்ற நாடுகளிலிருந்து கீழான வேலைக்கு வேலையாட்களை எதிர் பார்க்கின்றார்கள். நம்மவர் களும் பணத்திற்காக அந்த நாடுகளுக்குப் போகின் றார்கள். ஆனால், என்ன வளம் நம் நாட்டில் இல்லை என்று நாம்தான் யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே, எல்லோருக்கும் எல்லா நலங்களும் சமமாய்க் கிடைக்கும் என்ற நிலை வந்தாலும்கூட, அது தனக்கே முதலில் கிடைக்க வேண்டும் என்று ஒவ்வொருத்தரும் போட்டி போடுவதே இன்றைய மனிதனின் சுபாவம்.

மனிதர்களிடம் காணப்படுகின்ற இத்தகைய போட்டி, பொறாமை போக வேண்டுமானால், அவனுக்கு வேறாக இன்னொரு வஸ்து இல்லவே இல்லை என்ற ஞானம் வரவேண்டும்.

அப்போதுதான் மனித மனம் அமைதியை அடையும். அதுவே, சாந்தி!

ஆகையால், 'ஞானமெல்லாம் எதற்கு?' என்று தன்னைத் தானே ஒவ்வொருவரும் ஏமாற்றிக் கொள்ளாமல், தான் அறிய வேண்டிய அரிதான கல்வி இந்த ஆன்மவியல் கல்வி மட்டும்தான் என்று ஒவ்வொருவரும் முன் வரவேண்டும்.

இந்த உலகத் துன்பங்களை விலைக்கு வாங்கிக் கொள்ளாமலிருக்க வேண்டுமானால், 'இந்த உலகம் என்பது நாம் நினைப்பதுப் போல இல்லை, இது ஈஸ்வர சக்தி மயமானது'. ஆகவே, அது வேறு – நாம் வேறு இல்லை என்ற ஞானம் நமக்கு வர வேண்டும்.

அதை விளக்குகின்ற அருமையான ஒரு திருமந்திரப் பாடலைக் காணலாம்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே. - திருமந்திரம்.

ஒரு கோயிலுக்கு தன் தந்தையுடன் இறைவழிபாட்டுக்கு வந்த குழந்தை அங்கு வைக்கப் பட்டிருந்த மரத்தால் செய்யப்பட்ட மர யானையைப் பார்த்து பயந்து நின்றது. அதனால், அந்தக் குழந்தை தன் தந்தையைப் பார்த்து, “அப்பா! அந்த யானை கிட்டப் போகாதே அது முட்டும்” என்று கத்தியது.

அதேசமயம், அந்தக் குழந்தையின் அப்பா, மர யானையைப்பார்த்து அதன் அழகில் மயங்கி நின்று, அது யானை அல்ல வெறும் மரம்தான் என்ற அறிவையும் கொண்டுள்ளதால், “இல்லையம்மா! இது

முட்டாது". இது மரத்தால் செய்யப்பட்ட மர யானை தான் என, அந்த குழந்தைக்கு மரம் என்பதை எடுத்துக்கூறி, தைரியத்தை வரவழைத்தார்.

ஆனால், இங்கு இருவருமே ஒரு விசயத்தை மறந்துவிட்டனர். அது என்னவெனில், அது வழிபாட்டிற்குரிய யானை என்பதை விட்டுவிட்டு, ஒருவர் ஒதுங்குவதும், மற்றொருவர் அதன் அழகில் மயங்குவதுமாக மட்டுமே இருந்தனர்.

இதுப்போலத்தான், மனிதர்களாகிய நாமும் இந்த உலகத்தைப் பார்த்து பயந்துக்கொண்டு, இது அதிக துன்பத்திற்கு நம்மை உட்படுத்துகின்றது.

ஆதலால், இதன்மீது பற்று வைக்கக்கூடாது என்றவாறு ஒதுங்குகின்ற ஒரு கூட்டமும், இல்லை! இது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கின்றது. ஆதலால், அதன் மயக்கத்திலேயே வாழவிரும்புகின்ற ஒரு கூட்டமும் என இருவேறு பிரிவுகளாகப் பிரிந்து இருக்கிறோம்.

ஆனால், இந்த இரண்டு கூட்டத்திலும் சேர விரும்பாத ஒரு கூட்டம் உள்ளது. அதுவே, ஞானிகள் கூட்டம்.

அவர்களால் மட்டும்தான் இங்கு "**இருப்பதெல்லாம் இறைவனே!**" என்று பார்க்க முடியும்.

சரி! இப்போது, திருமந்திரப்பாடல் விளக்கம் பார்க்கலாம்.

**யானை தெரிவதால் மரம் தெரியவில்லை**
**மரம் தெரிவதால் யானை தெரியவில்லை**
**உலகம் தெரிவதால் இறைவன் தெரியவில்லை**
**இறைவன் தெரிவதால் உலகம் தெரியவில்லை.**

அதாவது, அதை மரமாகப் பார்த்தால் யானை தெரியாது. யானையாகப் பார்த்தால் மரம் தெரியாது. அதுப்போலவே, உலகமாகப்பார்த்தால் இறைவன் தெரியாது. இறைவனாகப்பார்த்தால் உலகம் தெரியாது.

“**மரம்** தெரிந்தால், **பரம்** தெரியாது! **பரம்** தெரிந்தால் **மரம்** தெரியாது!”

அதாவது, அந்த கோவிலில் உள்ள மர யானை வழிபாட்டிற்கு உரிய ஒரு இறைவன் என்பதினால், அதை இறைவனாக பார்க்கும் போது, மரமாகத் தெரியாது, மரமாகப் பார்க்கும் போது, இறைவனாகத் தெரியாது.

உண்மையில், "யானை வேறு, மரம் வேறு இல்லை!" அது பார்ப்பவர்களின் மனதில்தான் இருக்கின்றது என்பதுப்போல, "பரமாத்மா வேறு, உலகம் வேறு இல்லை!" என்ற இப்படி ஒரு விளக்கத்தை கொடுக்கின்றார் திருமூலர்.

இதைத்தான் **கல்லைக் கண்டால், நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்** என்று பழமொழியாகக் கூறுவதும் உண்டு. அதாவது, கல்லாகப்பார்த்தால் நாய் தெரியாது. நாயாகப் பார்த்தால் கல் தெரியாது.

ஆகவே, பரம் என்கிற மரம் மூலம் ஆனதுதான் இந்த உலகம் என்ற பிரபஞ்ச பொம்மை. குழந்தைக்கு **மரம்** தெரியாமல் யானை மட்டும் தெரிந்தது போல, நமக்கு **பரம்** தெரியாமல் இந்த உலகம் மட்டும் தெரிகின்றது.

அதாவது, யானை உருவம் அந்த மரத்தை மறைத்துக் கொண்டுள்ளது. அதுப்போல, இந்த உலகத்தில் உள்ள உருவங்கள் அந்த பரத்தை மறைத்துக் கொண்டுள்ளது என்று அறிய வேண்டும்.

நம் பார்வையில் பார் முதலான பஞ்சபூதங்கள் அந்த பரத்தை மறைத்து விட்டன. ஆனால், ஞானிகளுக்கோ எல்லாம் பிரம்ம மயமாகவே

தெரிகிறது. அவர்கள் விஷயத்தில், பார்முதற் பூதங்கள் அந்த பரத்தில் மறைந்துபோய் விடுகின்றன.

இந்த ஞானம் இல்லாவிட்டால், எத்தனை பொருளாதார முன்னனேற்றம் வந்தாலும் இந்த உலகம் அறியாமை என்ற இருட்டில் அகப்பட்டுக் கொண்டிருப்பதாகவே அர்த்தம்.

இத்தகைய அறியாமை இருளை அகற்ற, அவசியம் நாம் ஒவ்வொருவரும் ஞானப்பிரகாசத்தை தருகின்ற ஆத்ம ஞான பாடங்களைப் படித்துப் பயனடைய வேண்டும். அப்போதுதான் நாம் செய்யும் செயலின் உண்மைத் தன்மையை உணர முடியும்.

**ஓம் தத் ஸத்!**

# கர்மா



ப்ரக்ஞன்